# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : சமூகப் பிரச்சனைகள்

பகுதி : **பெண்கள் அதிகாரம்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

# பெண்கள் அதிகாரம்

**முன்னுரை:**

சர்வதேச பெண்கள் ஆண்டாக 1975 யை ஐக்கிய நாட்டு சபை அறிவித்தது. சர்வதேச பெண்கள் தினம் - மார்ச் 8.

ஐக்கிய நாட்டு சபையில் பெண்களுக்கு அறிவிக்கப்பட்ட பத்தாண்டு - 1976 - 1985.

**பெண்களுக்கு அதிகாரமளித்தல்**

1. பெண்களுக்கு அதிகாரமளித்தல் எனப்படுவது, "அவர்களின் சொந்த நலன் மற்றும் சமுதாய நலன் சார்ந்த கருத்தாக்கத்தில் தாங்கள் முடிவெடுக்கும் ஒரு சூழ்நிலையை உருவாக்குதல்" எனலாம்.
2. மேலும், சமுதாய, பொருளாதார, அரசியல் மற்றும் சட்டப் பூர்வ நடவடிக்கைகளின் பெண்களின் உரிமைகளை சமமாகவும், நியாயமாகவும் பெற்றிட வழி வகை செய்தல், அவர்களின் உரிமைகள் பின்வருமாறு பட்டியலிடப்படுகின்றன.
    - சுதந்திரமான சுய மரியாதையாக வாழ்தல்.
    - மனையிலும், வெளிப்புறத்திலும் தன் வாழ்வினை தானே நிர்ணயித்தல்.
    - தன் விருப்பங்களை தேர்ந்தெடுத்தல், தானே முடிவு செய்தல்.
    - சமுதாய, மத, பொது நடவடிக்கைகளில் சம வாய்ப்பு பெறும் உரிமை பெற்றிடம்.
    - சமுதாய அற்தலப்பத்தில் சம உரிமை
    - சமுதாய, பொருளதார நீதியினை சமமாக பெற்றிடல்
    - நிதி மற்றம் பொருளாதார நடவடிக்கைகளை தானே தீர்மானித்தல்.
    - கல்வி பெறுவதில் சம உரிமை, வேலைவாய்ப்பு பெறுவதில் சம உரிமை
    - பாதுகாப்பான பணிச்சூழல் பெற்றிடல்
    - தன் கருத்துக்களை எடுத்துரைக்கும் அதிகாரம் பெற்றிடல்.
    - அனைத்து துறைகளிலும் பெண்களுக்கு சம வாய்ப்பு அளித்தல்.

**பெண்களுக்கு அதிகாரமளித்தலின் முக்கியத்துவம்**

1. **குறை வேலை மற்றும் வேலை வாய்ப்பின்மை :** உலக மக்கள் தொகையில் 50% பெண்கள், ஆனால் உலகளவில் பெண்கள் பெரும்பாலனோர் வேலையற்றவர்கள், இதனால் உலகப் பொருளாதாரம் பாதிப்பை வழிவகை செய்கிறது.

2. **சம போட்டித்திறன்/ அறிவுக் கூர்மையுடையோர் :** ஆண்களும், பெண்களும் சம அறிவுடையவர்களை, தற்போதைய சூழலில் ஆண்களை விட பெண்களே மிதமிஞ்சிய சமுதாய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

3. **திறமையானவர்கள்:** பெண்கள், ஆணிற்குச் சமமான திறமையை உடையோர் ஆதலால், தற்கால சமுதாயத்தில் உயர்கல்வி, மருத்துவம், அறிவியல் சார்ந்த துறைகளில் மேம்பட்டு வருகின்றனர்.

4. **ஒட்டு மொத்த சமூக வளர்ச்சி :** பெண்களின் முன்னேற்றம் அவர்களது குடும்ப சூழ்நிலை உயர்த்துவதோடு மட்டுமில்லாமல் சமுதாய நலனை பெருக்குவதிலம் பங்காற்றுகிறது.

5. **பொருளாதார நலன் :** மகளிரின் அதிகாரமளித்தல், பெரும்பாலும் பொருளாதார நடவடிக்கைகளைவிட மேம்படுத்துவதுடன், ஆணிற்று நிகரா பணிச் சூழலிலும் மேம்படுகிறது. முந்தைய காலங்களில், "அடுப்பூதும் பெண்ணிற்கு படிப்பெதற்கு" என்ற நிலை மாறி தங்களது சொந்த காலில் நிற்கும் திறனை மகளிர் பெற்றிருப்பது அவர்களை சுதந்திரமாகவும், தன்னம்பிக்கையுடனும் செயல்பட வைப்பதோடு சமுதாய, பொருளதார நலனையும் அதிகரிக்கிறது.

6. **குடும்ப வன்முறையிலிருந்து மீளுதல் :** பெண்கள் அதிகாரம், பெரும்பாலும் தாங்கள் குடும்ப வன்முறையிலிருந்து மீளும் சூழ்நிலைக்கு வித்திருகிறது. கல்வியறிவுவில்லாத பெண்களை பெரும்பாலும், குடும்ப வன்முறைக்கு ஆளாகின்றனர்.

7. **ஊழலற்ற நிர்வாகம்:** மகளிர் கல்வியறிவு பெறும் பொழுது, அவர்களது விழிப்புணர்வு நிலையில் ஊழல், சுரண்டல் முதலியவை குறைந்து காணப்படுகிறது.

8. **வறுமையற்ற சமுதாயம்:** பெண்களின் அதிகாரம் வறுமையை போக்க உதவுகிறது. ஒரு குடும்ப சூழ்நிலையில் ஆணின் வருமானம் போதுமானதாக இல்லாத பொழுது, பெண்ணின் வருமானம் கிடைக்கப் பெறும் பொழுது வறுமையைப் போக்க உதவுகிறது.

9. **தேசிய வளர்ச்சி :** தேசிய வளர்ச்சியில் பெண் தொழில் முனைவோர்களின் பங்கு அளப்பரியதாகும், ஒவ்வொரு பெண்களின் முன்னேற்றமும் தேசத்தை பெருமையடையச் செய்கிறது. தங்களது தனித்திறன் மூலம் மருத்துவம், சமூகசேவை, பொறியியல் மற்றும் அனைத்து துறைகளிலும் பெண்கள் சாதித்து வருவது தேசிய வளர்ச்சியை மேம்படுத்துவதாகும்.

10. **மாற்று இல்லாத மகளிர் துறைகள் :** சில துறைகளில் மகளிர் மட்டுமே சாதிக்கக் கூடியசைகள் என வரையறைகள் உண்டு. அவை மகளிரின் தனித்திறன் சார்ந்த வளர்ச்சி ஆகும்.

**சமுதாயத்தில் பெண்களின் நிலை :**

| | |
|---|---|
| பாலின வேற்றுமை குறியீடு | |
| மதிப்பு | 0.563 (2014) |
| தரம் | 127வது |
| தாய்மார்கள் இறப்பு வீதம் (100000க்கு) | 174 (2015) |
| பாராளுமன்றத்தில் பெண்கள் | 12.2% (2014) |
| 25 வயதிற்கு மேற்பட்ட இடைநிலை கல்வி பயின்ற மகளிர் | 27% (2014) |
| பணிச்சூழலில் மகளிர் | 29% (2013) |
| உலகளாவிய பாலின வேற்றுமை குறியீடு : மதிப்பு | 0.664 (2015) |
| தரம் | 108 / 1.36 |

**அரசியலமைப்பு கட்டமைப்புகள் :**

1. சரத்து 14 : சட்டத்தின் முன் அனைவரும் சமம்.
2. சரத்து 15 : பாலின வேற்றுமை அகற்றுதல்.
3. சரத்து 15(3) : குழந்தைகள் (ம) பெண்களுக்கு நலன் சார்ந்த சட்டமியற்றுதல்.
4. சரத்து 16 (1) & (2) : வேலை வாய்ப்பு, பணி நியமனங்களில் சம வாய்ப்பு, வேறுபாடின்மை.
5. சரத்து 23 : அடிமைத் தனத்திற்கு அதிரான உரிமை. முனிதக் கடத்தலை தடுக்கிறது.
6. சரத்து 39 (d) : வாழ்வாதார அடிப்படை உரிமைகள் மற்றும் சம வேலைக்கு சம ஊதியம் வழங்குதல்.
7. சரத்து 39 (e) : ஆண், பெண் வேறுபாடியில்லாத உடல் நலன் சார்ந்த பணிச்சூழல்.
8. சரத்து 42 : மனிதச் சூழல் குறித்த பணிச் சூழல் மற்றும் பிரசவ கால விடுப்பு வழங்குதல்.
9. சரத்து 46 : பின் தங்கிய வகுப்பினரை மேம்பட சிறப்பு நடைமுறைகளை செயல்படுத்துதல்.

10. சரத்து 51(A) (e) : மனித குலத்தில் அமைதி மற்றும் பன்னாட்டு அமைதியை மேம்படுத்தி சகோதரத்துவத்துடன் வாழ வழிவகை செய்தல்.
11. சரத்து 243 D(3) : பஞ்சாயத்துக்களில் 1/3 பகுதி இடங்களை பெண்களுக்கு ஒதுக்குதல்.
12. சரத்து 243 (D) : நகராட்சி மற்றும் ஊராட்சி பஞ்சாயத்துக்களில் 1/3 பகுதி நிர்வாக இடங்களை பெண்களுக்கு ஒதுக்குதல்.
13. சரத்து 325 : வாக்களிப்பதில் ஆண் - பெண் வேறுபாடின்றி வாக்களிக்க வழி வகை செய்தல்

**பெண்களுக்கான சட்டப்பூர்வப் பாதுகாப்பு:**

1. திருமணமான பெண்கள் உடைமைகள் சட்டம் 1874
2. தொழிலாளர் பங்களிப்புச் சட்டம் 1923
3. இந்திய வாரிசுரிமைச் சட்டம் 1925
4. வரதட்சணை தடுப்புச் சட்டம் 1961
5. பெண்களை தவறாக சித்தரித்தல் (தடைச்) சட்டம் 1986
6. சதி ஒழிப்புச் சட்டம் 1987
7. தேசிய பெண்கள் ஆணையச் சட்டம் 1990
8. இந்து வாரிசுரிமைச் சட்டம் (மாற்றம் செய்தது) 2005.
9. பெண்களுக்கு எதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் 1986
10. ஒழுக்கக் கேடு தடுப்புச் சட்டம் 1956
11. குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் 1986

**சர்வதேச பெண் ஆதரவு அமைப்புகள்:**

1. CEDAW - பெண்களுக்கு எதிரான அனைத்து 1979 நடவடிக்கை ஒழிப்பு செயல்பாடுகள்.
2. UN Development Fund for Women ஐக்கிய நாடுகளின் மகளிர் மேம்பாட்டு நிதி - 1976

## ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் பெண்களின் அதிகாரமளித்தல்

| எண் | ஐந்தாண்டுத்திட்டகாலம் | பெண்களுக்கான திட்டங்கள் |
|---|---|---|
| 1. | முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951 -56) | பெண்களின் நலனுக்காக மத்திய சமூக நல அமைப்பு 1953ல் உருவாக்கப்பட்டது. |
| | இரண்டாவது (1956 -61) | மகிளா மண்டல எனப்படும் பெண்களுக்கான அமைப்பு உருவாக்கப்பட்டது. |
| 3. | மூன்றாவது, நான்காவது மற்றும் ஓராண்டுத் திட்டங்கள் (1961 - 74) | பெண்கல்வி, குழந்தைகள் நலன் குழந்தைகளுக்கான உணவூட்டம் |
| 4. | ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (1974 -1978) | பெண்களின் நலன் என்ற நிலையிலிருந்து பெண்களின் முன்னேற்றம் என்ற கருத்து உருவாக்கப்பட்டது. |
| 5 | ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் (1980 - 85) | பெண்களின் உடல் நலம், கல்வி, வேலை வாய்ப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. |
| 6. | ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் (1985 - 90) | தேசிய வளர்ச்சியில் பெண்களை ஈபடுத்த முயற்சி எடுக்கப்பட்டது. |
| 7. | எட்டாவது (1992- 97) | பெண்களின் முன்னேற்றம் என்ற நிலையிலிருந்து பெண்கள் அதிகாரம் என்ற வகையில் ரூ.4 கோடியாக முதல் திட்ட காலத்தில் இருந்த நிதி ரூ. 2000 கோடியாக உயர்த்தப்பட்டது. |
| 8. | ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் (1997-2002) | அரசின் அனைத்து திட்டங்களிலும் 30% இட ஒதுக்கிடு அளிக்கப்பட்டது. |
| 9. | பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (2002-2007) | பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் பொருட்டு கொள்கைகள் திட்டங்கள் வகுக்கப்பட்டன |
| 10. | பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் (2007-2011) | பெண்களுக்கெதிரான வன்கொடுமை, பொருளாதார அதிகாரம், அரசியல் பங்கேற்பு, உடல் நலம் முதலியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தல். |

**பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள்:**

**சதி (அல்லது) உடன் கட்டை ஏறும் பழக்கம் :**

1. பழங்காலத்தில் நடைமுறையில் இருந்த பழக்கம். கணவன் இறந்தவுடன் அவனுடைய சிதையில் மனைவியும் எரிந்து உயிர் துறத்தலைக் குறிக்கிறது. இதன் பின்னணியில் விதவைகளின் மீது சமுதாயத்தின் பார்வை மிக மோசமானதாக அமைந்ததை காண முடிகிறது.
2. அதாவது, ஒரு வேளை உணவு, தரையில் உறங்குதல், அணிகலன்கள் (அ) நிறமுடைய ஆடைகள் உடுத்தத் தடை போன்றவை பின்பற்றப்பட்டது.
3. இடைக் காலங்களிலும், விதவைகளுக்கு மொட்டை போடும் பழக்கம் நடைமுறையில் இருந்துள்ளது.
4. வில்லியம் பெண்டிங் வங்காளத்தின் கவர்னர் ஜெனரலாக இருந்த போது சதியை ஒழிக்க 1829 ஆம் அண்டு ஒரு சட்டம் இயற்றினார். வங்காள சீர்திருத்தவாதி இராஜாராம் மோகன்ராய் சதித் தடை கொண்டு வர பாடுபட்டார்.

**சுதந்திதரத்திற்கு பிறகு சதி :**

1. சதிக் கொடுமைக்கு எதிராக பல்வேறு சட்டப்பூர்வ நடவடிக்கைக்குப் பிறகும் சில இடங்களில் சதி நடைபெற்றுள்ளது. அவற்றை பந்தல் கண்ட் பகுதியில் காணப்படும் சதிக்கோயில்கள் நினைவுத்தூண்கள் அதை எடுத்துரைக்கின்றன.
2. இந்திய அரசு 1987 ஆம் ஆண்டு சதித் (தடைச்) சட்டம் கொண்டு வந்ததன் மூலம் சதி முற்றிலும் தடை செய்யப்பட்டது.

**வரதட்சணைக் கொடுமைகள் (ம) இறப்புகள் :**

முன் காலத்தில், ஒரு பெண்ணின் திருமணம் நடைபெறும் பொழுது அவளது கணவருக்கு வழங்குவர், இதை ஒரு சம்பிரதாயமாகவே பின்பற்றினர். பின்னர், இது கட்டாயமாக்கப்பட்டு பல விதமான சமூகக் கொடுமைகள் ஏற்பட காரணமாயின. இதன் மூலம் பெண் சிசுக் கொலை, தற்கொலை, தீக்குளிப்பு போன்ற நிகழ்வுகள் சமூகத்தில் நிகழ்ந்தன.

மிக அதிகமான வரதட்சினைக் கொடுமைகள், கணவர் வீட்டிலேயே அதிகமாக நடைபெறுகின்றன. நடுத்தரக் குடும்பப் பெண்களே அதிகளவு பாதிக்கப்படுகின்றனர். 70% பாதிக்கப்பட்ட பெண்கள் 21 முதல் 24 வயதுடையவர் ஆவர்.

**காரணங்கள் :**

1. ஆணாதிக்க, ஆண்களே உயர்ந்த நிலையில் உள்ள சமூகம்.
2. மகள்கள் சுமையாகவும், மகன்கள் சொத்தாகவும் கருதும் நிலை.
3. பெண்களுக்கெதிரான பொருளாதார சூழல் (அ) பெண்களின் பொருளாதார இயலாமை.
4. வரதட்சணை பெறுவத கௌவராமக கருதுபவர்.
5. பழைமையவாத சமூக, பண்பாடு சார்ந்த அங்கீகாரம் வரதட்சனைக்கு வழங்கப்படும்.

**குழந்தை திருமணம்**

இந்தியச் சட்டப்படி, பெண் 18 வயதிற்குக் கீழும், ஆண் 21 வயதிற்குள்ளும் செய்து கொள்ளும் திருமணங்கள் குழந்தைகள் திருமணங்களாகும். குழந்தைத் திருமணங்களில் பெரும்பாலானவை குறை வயதுடைய பெண் சார்ந்தே அமைகின்றன. அவற்றின் முக்கிய காரணமாக அவர்களது சமூக - பொருளாதார ஏழ்மை நிலையே அமைகிறது.

**எதிரான சட்டங்கள் :**

1. குழந்தை திருமணத் தடைச் சட்டம் (அ) சாரதா சட்டம் 1929 ஏற்படுத்தப்பட்டு ஏப்ரல் 1, 1930 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டது. இது ஜம்மு & காஷ்மீர் மாநிலம் தவிர அனைத்து இந்திய மாநிலங்களுக்கும் பொருந்தும்.
2. குழந்தைத் திருமண தடைவிதிப்புச் சட்டம், 2006
3. இப்புதியச் சட்டம் குழந்தைத் திருமணத்திற்கு ஊக்குவிப்பவர்களை கடுமையாக தண்டிப்பதுடன், அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு வழங்கு அவர்களை பாதுகாத்து வருகிறது.

**காரணங்கள்**

1. படிப்பறிவில்லா பெற்றோர்
2. வறுமை
3. வரதட்சனை
4. பாதுகாப்பில்லா சமூம்
5. சட்டத்தில் உள்ள குறைபாடுகள்
6. மக்கள் தொகைப் பெருக்கம்

**வரதட்சனைக்கு எதிரான அரசின் தண்டனைகள் :**

இந்திய தண்டனைச் சட்டம் 304 B பிரிவு திருமணம் ஆகி 7 வருடங்களுக்குள் ஒரு பெண் இறந்து விட்டால் அவளது கணவன், உறவினர்கள் தண்டனைக்கு உள்ளாவர்கள்.

**இந்திய தண்டனைச் சட்டம் 498 A :**

1. வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தும் கணவன் மற்றும் உறவினர்களை தண்டித்தல், 1961 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வரதட்சணைத் தடைச் சட்டம் வரதட்சணை
2. வாங்குவதும், கொடுப்பதும் சட்டப்படி குற்றம் என வரையறை செய்கிறது.
3. 2009ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தீர்ப்பின்படி வரதட்சணை தடை அனைத்து திருமணமான தம்பதிகளுக்கும் ஒரே வகையில் பொருந்தும் என வரையறை செய்கிறது. குழந்தைத் திருமணங்களால் ஏற்படும் விளைவுகள் :
4. பிரசவகால இறப்பு வீதம் அதிகரித்தல்
5. குறை ஊட்டசத்து குழந்தைகள் எண்ணிக்கை அதிகரித்தல்
6. வறுமை அதிகரித்தல்
7. குடும்ப வன்முறை தோன்றல்
8. பெண்களின் மனநிலை பாதிப்பு

**குழந்தைத் திருமண தடுப்பு அதிகாரிகள் கடமைகள் :**

1. கடுமையான சட்டங்கள் இயற்றல், கடைபிடித்தல்.
2. விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
3. குழந்தைத் திருமண புள்ளி விவரங்களை கையாளுதல்.
4. கிராமப்புறங்களில் குழந்தை திருமண கேடான விளைவுகளை எடுத்துரைத்தல்
5. அரசின் பிற திட்டங்களை முழுமையாக செயல்படுத்துதல்.
6. பெண் குழந்தை இறப்புகள் (அ) பெண் குழந்தை கொல்லிகள்
7. பிறந்த பெண் குழந்தைகளை கொல்லுவது பெண் குழந்தை கொல்லி ஆகும்.

**காரணங்கள் :**

- வறுமை
- வறட்சி
- இளவயது திருமணம்

- ஆண் குழந்தை மோகம்
- படிப்பறிவின்மை
- அறிவின்மை (அ) அறியாமை
- திருமணமாகாத பெண்ணின்
- கருச்சிதைவு

**விளைவுகள் :**

- பாலின வேறுபாடு
- பால விகிதம் குறைவு
- பெண் கல்வியறிவு குறைதல்
- பொருளாதார பின்னடைவு
- ஆண் சார்ந்த சமூகம் தோன்றல்

**சட்டங்கள் :**

1. தொட்டில் குழந்தைத் திட்டம் 1992
2. பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் 1991

**பல திருமணம் செய்வோர் : (Polygany)**

1. ஒன்றிற்கு மேற்பட்ட மனைவியை ஒரே நேரத்தில் திருமணம் செய்து கொள்ளும் வழக்கம்.
2. இந்து திருமணச் சட்டம், 1955ன் படி ஒருவருக்கு ஒரே மனைவி மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. இந்தியாவில் பல திருமணங்கள் பெண்களின் உரிமைகளை பாதிப்பதுடன் பல சமூக கொடுமைகளுக்கும் வித்திடுக்கிறது.

**குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2005 :**

1. குடும்ப வன்கொடுமை தடுப்பு சட்டம் மசோதா 2005ல் தாக்கல் செய்யப்பட்டு, 2006ம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது. இச் சட்டத்தில் 5 பகுதிகளும், 37 பிரிவுகளும் உள்ளன.
2. வன்கொடுமை என்பது உடலளவிலோ, மனதளவிலோ, பொருளாதார ரீதியான சுரண்டலினாலோ ஒருவரின் உடல் நலத்திற்கோ, உயிருக்கோ, தீங்கு விளைவிப்பவன் அது வன் கொடுமை என்ற பிரிவின் கீழ் அங்கும் பாதிக்கப்பட்ட

பெண், கணவனது வீட்டிலே பாதுகாப்பாக தங்கியிருக்கும்படி, உத்தரவு பிறப்பிக்க நீதிபதிக்கு இச்சட்டம் அறிவிக்கிறது. பாதிக்கப்பட்ட பெண் மீண்டும் அவ்விடத்திலேயே பாதிக்கப்பட்டால் மீண்டும் அவ்வீட்டிற்கு செல்ல இயலாது என உத்தரவு பிறப்பிக்க இயலும், மேலும் குற்றம் நிரூபிக்கப்பட்டால் குற்றவாளிக்கு 1 வருடம் சிறைத் தண்டனையும், ரூ. 20000 வரை அபராதமும் விதிக்கப்படும்.

3. இச்சட்டத்தின் விரைவான நீதி கிடைக்க வழி கோலுகிறது. அதாவது 3 முதல் 60 நாட்களுக்குள் வழக்கு முடிக்கப்பட வேண்டும்.

**பாலியல் தொல்லை :**

வேலையிடங்களிலோ, பொது இடங்களிலோ பெண்களுக்கு பாலியல் துன்புறுத்தல் தரும் நடவடிக்கையாகும்.

**நீதிமன்றம் உத்தரவுப்படி**

1. உடல் ரீதியான துன்புறுத்தல்
2. பாலியல் புரிய அழைத்தல், வற்புறுத்தல்
3. பாலியல் சார்ந்த நூல்கள், திரைப்படங்களை பார்க்க லியுறுத்தல்.
4. உடல் ரீதியான பாலியல் வற்புறுத்தல்.

இந்திய அரசியல் சட்டம் ஷரத்து உரிமைகள் 14,15 மற்றும் 21யின் படி அடிப்படை உரிமைகளான பாலின வேறுபாடு, வாழிவதற்கான உரிமை, சுதந்திர உரிமைகளை பாதிப்பதாகும், மேலும் ஷரத்து 19(1) (g)ன் படி சுதந்திரமாக வணிகம், வியாபாரம், தொழில் உரிமைகளையும் பாலியல் தொல்லை பாதிக்கிறது.

**மகளிர் இட ஒதுக்கீடு மசோதா :**

1. மகளிர் இட ஒதுக்கீடு மசோதா (அ) 118 வது அரசியமைப்பு சட்டத் திருத்த மசோதா நாடாளுமன்றத்திலும், சட்டப்பேரவையிலும் 33% இட ஒதுக்கீட்டினை பெண்களுக்கு வழங்கவதற்கான நிலுவையிலுள்ள மசோதாவாகும்.
2. மூன்று தொடர்ச்சியான பொதுத் தேர்தல்களுக்கு ஒருமுறை இட ஒதுக்கீடு.
3. இராஜ்ய சபையில் மார்ச் 9, 2010ல் மசோதா தாக்கல் செய்யப்பட்டது.
4. பிப், 2014ல் மக்களவையில் இதற்கு ஆதரவாக வாக்குள் பதிவாகவில்லை.
5. மக்களவையில் அனுமதிக்கபட்டபின், பாதிக்கும் மேற்பட்ட இந்திய மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டு, ஜனாதிபதியில் சட்டமாக இயற்றப்படும்.

**மசோதாவின் முக்கியவத்தும்**

1. முற்காலத்திலிருந்தே பெண்களுக்கு எதிரான கொடுமைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.
2. பாராளுமன்றத்தில் 10 % கீழ் பெண்களின் நிலை.
3. பெண்களுக்கு அதிகாரமளித்தலின் முக்கிய நிலையாக மசோதா கருதப்படுகிறது.
4. பெண்களுக்கு பெண்களே பிரதிநிதித்துவம் என்ற நிலை உருவாதல்.
5. பெண் கல்வி, வேலைவாய்ப்பு, தொழில் முனைவோர், உருவாக வழி கோலுதல்.

**தேசிய மகளிர் ஆணையம் :**

1. தேசிய பெண்கள் ஆணையமானது, பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின் மூலம் கொண்டு வரப்பட்டது. 1992ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. பெண்களுக்கான தேசிய ஆணையச் சட்டம், 1990 இன்படி உருவாக்கப்பட்டது. இவ்வாணையத்தில் பெண்களுக்கான பிரச்சினைகள், குற்றங்கள், குறித்து அரசிற்கு ஆலோசனை அமைப்பாக செயல்படுகிறது.
2. முதல் ஆணையம் 1992ல் ஜெயந்தி பட்நாயக் தற்போதைய தலைவர் லலிதா குமாரமங்கலம்.
3. அமைப்பு
4. ஒரு தலைவர், மேலும்
5. பல்வேறு துறைகளில் திறமை வாய்ந்த 5 உறுப்பினர்கள் மற்றும்
6. ஒரு செயலர் மத்திய அரசால் நியமிக்கப்படுவர்.

**செயல்பாடுகள் :**

1. ஆணையத்தின் செயல்பாடுகள், தேசிய பெண்கள் ஆணையச் சட்டம் 1990, பிரிவு 10 ன் படி வரையறுக்கப்படுகிறது.
2. அரசியலமைப்பு மற்றும் பிற சட்டங்களின் உள்ள பெண்களுக்கு ஆதரவான அனைத்து பாதுகாப்புகளையும ஆய்வு செய்தல்.
3. மத்திய அரசிடம் வருடத்திற்கு ஒரு முறை ஆய்வறிக்கை சமர்ப்பித்தல்.
4. பெண்களின் பாதுகாப்பிற்காக தேவையான பரிந்துரைகளை மத்திய மற்றும் மாநில அரசிற்கு வழங்குதல்.
5. அரசியலமைப்பின் சரத்து, பரிந்துரைகளை மீதும் வழக்குகளை விசாரித்தல்.

6. பெண்களின் உரிமைகளை பாதிக்கும நடவடிக்கைகளில் ஈடுபட்டு உரிமைகளை மீட்டல்.
7. பெண்களின் முன்னேற்ற நிலைகளை கணக்கிடுதல்.
8. பெண்களின் சமூக பொருளாதார மேம்பாட்டினை அளவிடுதல்.

**பெண்களின் அதிகாரமயமாதல் குறித்த தேசிய கொள்கை (2001)**

1. இந்திய அரசியலமைப்பின் முகவுரை, அடிப்படை உரிமைகள், அடிப்படை கடமைகள் மற்றும் அரசின் நெறிமுறைக் கோட்பாட்டில் பாலின சமத்துவம் குறித்து தெளிவாக எடுத்துரைக்கப்படுகிறது.
2. பெண்களின் சமத்துவம் மட்டுமில்லாமல், பெண்களின் நிலை மேம்பட அரசின் வழிகாட்டுதலையும் அரசியலமைப்பு எடுத்துயம்புகிறது.
3. ஜனநாயக கொள்கை, சட்டங்கள், முன்னேற்றத் திட்டங்கள், செயல்பாடுகள் அனைத்திலும் பெண்களின் முன்னேற்றமே முக்கியத்துவம் பெறுகிறது.
4. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (1974 - 78) முதல் "பெண்களின் நலம் என்ற நிலை மாறி பெண்களின் முன்னேற்றம்" என்ற நிலை வளர்ந்து வருகிறது.
5. பெண்களின் தற்போதைய நிலையானது, பெண்களுக்கு அதிகாரமளித்தல் என்ற முக்கிய நிகழ்வாக மாறியுள்ளது.

குறிப்பாக, பின்தாங்கிய வகுப்பினர், சிறுபான்மையினர் மலைவாழ் மக்கள், அட்டவணைப் படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்டோர் போன்ற பிரிவுகளில் உள்ள பெண்களின்

1. நிலை இன்றளவு மோசமாகவே காணப்படுகிறது.
2. அவர்களது கல்வி, உடல்நலம் போன்றவை பிறபகுதிகளை காட்டிலும் பின் தங்கியே நிலையிலேயே உள்ளது.
3. எனவே, அத்தகைய ஏழை எளியோரின் பெண்களின் நலம் சார்ந்த அதிகாரமளித்தல் அவசியம்.

**தேசிய கொள்கையின் நோக்கங்கள்:**

1. பெண்களின் முன்னேற்றம், வளர்ச்சி, அதிகாரமளித்தல்.
2. அனைத்துத் துறை சார்ந்தவர்களையும் ஒருங்கிணைத்து நோக்கங்களை அடைதல்.
3. பெண்களின் திறமைகளை கண்டறிந்து, அவர்களுக்கு சாதகமான சூழலை உருவாக்குதல்.

4. ஆண்களுக்கு நிகராக அனைத்து துறைகளிலும், பெண்களுக்கு வாய்ப்பளித்தல் உ.தா : அரசியல், பொருளாதாரம், பண்பாடு, குடியுரிமை.
5. முடிவெடுத்தால் பங்கு பெறும் நிலை.
6. கல்வி, வேலைவாய்ப்பு, உடல்நலம், மருத்துவம், அறிவியல் போன்ற அனைத்து துறைகளிலும் சமமான வாய்ப்பு அளித்திடல், ஆண்களுக்கு நிகரான சம ஊதியம் பெற்றிட வழிவகை செய்தல்.
7. பெண்களுக்கு ஆதரவான சட்ட திட்டங்களை வலிமையடையச் செய்தல்.
8. பாலின வேறுபாடுகளை களைதல்.
9. பெண்கள் சார்ந்த சமுதாயத்தினை கட்டமைத்தல்.

**அனைத்து இந்திய பெண்கள் கூட்டமைப்பு**

1. இவை, புது தில்லியை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் ஒரு அமைப்பாகும்.
2. 1927ல் மார்கெரட் என்பவரால், பெண்கள், குழந்தைகளின் வாழ்வை மேம்படுத்துதல் என்ற நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டது.
3. நாளடைவில் பல்வேறு சமூக, பொருளாதார மேம்பாடு நடவடிக்கைகளில் பெண்களின் முன்னேற்றம் காண செயல்பட்டு வருகிறது.
4. தற்போது, 100000 பெண்களை உறுப்பினராகக் கொண்டு 500 கிளைகளை நிறுவியுள்ளது.
5. சர்வதேச அளவில், பெண்களுக்கான ஒரு முன்னோடி அமைப்பாக AIWC செயல்படுகிறது.

**தமிழ்நாடு சமூக நல வாரியம் (1990)**

சமூக நலம் எனப்படுவது, சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் குறைந்தபட்ச வாய்ப்பளித்து தரமான வாழ்வாதார நிலை அளித்தலாகும்.

**செயல்பாடுகள் (ம) கடமைகள் :**

1. வாழ்வாதாரம், குற்றங்களை களைதல், சமூக சேவைகள் அளித்திடல்.
2. நிதிசார்ந்த செயல்பாடுகளை கண்காணித்து செயல்படுத்துதல்.
3. சமூகத்தில் பின்தங்கிய பெண்கள், குழந்தைகளின் முன்னேற்றத்திற்கான தலையாய அங்கம்.

பெண்களின் அதிகார மாளித்தலுக்கான சேவையாற்றும் தன்னார்வலர்களை கண்டறிந்து ஊக்கமளித்தல்.

**பெண்களுக்கு அதிகாரமளித்தலுக்கான பரிந்துரைகள்:**

**பொருளாதார அளவில் :**

1. கல்வி குறிப்பாக வாழ்வாதார அடிப்படை கல்வியினை பெண்களுக்கு வழங்குதல்.
2. பெண் தொழில் முனைவேருக்கு வழிச் சலுகை, கடன் வசதி ஏற்றடுத்துதல்.
3. சம வேலைக்கு சம ஊதியம் அளித்தல்.
4. வெற்றியடைந்த பெண் தொழில் முனைவோர்களின் வாழ்க்கையை பிரபலபடுத்துவதன் மூலம் ஊக்கமளித்தல்.
5. நிதர்சனத்தில், பெண்களுக்கான சொத்துரிமையை நிலை நாட்டில்.
6. பொருளாதார விழிப்புணர்வு முகாம்களை பெண்களிடையே ஏற்படுத்துதல், சிறப்ப சலுகைகள், மானியங்கள் வழங்குதல்.

**அரசியல் அளவில்:**

1. பாராளுமன்றத்தில் 33% இட ஒதுக்கீட்டினை உடமையாக அமல்படுத்துதல்.
2. அரசியல் ஈடுபடும் பெண்களுக்கு முன்னுதாரணமாக நிகழச் செய்தல்.
3. பத்திரிக்கை, தொலைக்காட்சி, அரசு சாரா அமைப்பினர் பெண்களின் அரசியல் நிலை மேம்பட பாடுபடுதல்.
4. அரசியல் விழிப்புணர்களை பெண்களிடையே ஏற்படுத்துதல்.
5. பெண்கள் வாக்கு முழுமையாக செலுத்துவதற்கு ஒத்துழைப்பு அளித்தல்.

**சமுதாய அளவில் :**

1. ஒரே மாதிரியான சிவில் முறையை நாடு முழுவதும் கொண்டு வருதல்.
2. சமய, சட்ட சடங்குகளை களைதல்.
3. குடும்ப வன்முறைகளை தவிர்த்தல்.
4. பெண்களை தாழ்த்தும் நெறிமுறைகளை மாற்றியமைத்தல்.
5. ஆண் மேலாதிக்க சமூகத்தை மாற்றுதல்,
6. பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

## பெண்கள் அதிகாரமளித்தலின் திட்டங்கள்

| வ.எண் | திட்டங்கள் | வருடம் | நோக்கம் |
|---|---|---|---|
| 1. | support to training and employment programme for women (STWP) | 2003-04 | பெண்களின் தனித் திறமையை மேம்படுத்திய அதன் மூலம் அவர்களது சுய சார்பு கொள்கையை உருவாக்குதன் மூலம் வருமான பெருக்கு நடவடிக்கைகளை ஏற்படுத்துதல். |
| 2. | ராஷ்ட்ரீய மகிளா கோஷ் (IRMIS) | 1993 | பெண்களுக்கு தேவையான கடனுதவி மற்றும் சிறப்பு சலுகைகளை வழங்குவதன் மூலம் சமூக பொருளாதாரத் திட்டங்களில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்துதல். |
| 3 | பருவ வயது பெண்களின் முன்னேற்றத் திட்டம் (SABLQ) | 2010 | 11 முதல் 18 வயதிற்குட்டப்பட்ட பெண்களின் உடல் நிலை, கலைத்திறன் மற்றும் பல்வேறு நிலைகளின் மேம்படச் செய்தல். |
| 4. | மத்திய சமூக நல வாரியம் (CSWB) | 1953 | பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்துல். |
| 5. | தேசிய கடன் நிதி (பெண்கள்) | 1993 | இதன் மூலம் மகளிருக்கு சிறு நுண்ணிய கடன் வசதி, வட்டியில்லா கடன், தவணை முறை வசதி ஏற்படுத்தப்படுகிறது. |
| 6. | Indira Gandhi Metritva Sathyog Yojana (IGMSY) | 2010 | கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்களுக்கு மானியம், சலுகைகள் வழங்கும் திட்டம் ரூ.4000, 3 தவணைகளாக வழங்கப்படுகிறது. |
| 7. | சுயம்சிதா (Indira Methile Yojana) (IMY) | 2001 | சுய வேலை வாய்ப்பு மற்றும் சுய உதவிகுழு ஏற்படுத்துதல் மூலம் வலிமையான அடித்தளம் அமைத்தல். |
| 8. | பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான தங்கும் விடுதி அமைப்பு (SSH) | 1969 | குடும்ப பிரச்சினையினாலோ, ஆபத்து சூழ்சிலையினாலோ பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுமிகளின் தற்கால வாழ்வாதாரத்திற்காக அவர்களுக்கான தங்கும் விடுதி ஏற்படுத்துதல். |
| 9. | சுவதார் | 1995 | பெண்களை சுயமாக சிந்தித்தல், செயல்படுதல் மற்றும் தன் வாழ்வினை |

| | | | |
|---|---|---|---|
| | | | தீர்மானித்தல் போன்ற செயல்பாடுகளை ஊக்குவித்தல். |
| 10. | STEPW | 1986 | பெண்களை சிறு குழுக்களாக ஒன்றிணைத்து அவர்களுக்கு தேவையான பயிற்சி, கடனுதவி மற்றும் அவர்களது திறமைகளை வளரச் செய்தல். |
| 11. | கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (DWCRA) | 1982 | கிராமப்புற பெண்களின் சமூக பொருளதார நிலை உயர்த்துதல், அவர்களுக்கு தேவை சுய சார்பு நிதித் தேவைகளை பூர்த்தி செய்ய உதவி பிரிதல். |
| 12. | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு வாரியம் | 1983 | பெண்களுக்கான சமூக பொருளாதார அதிகாரமளித்தலை வழங்குதல். |

**பெண்கள் மற்றும் குழந்தைகள் உடல் நலம் சார்ந்த திட்டங்கள்**

| **எண்** | **திட்டம்** | **ஆண்டு** |
|---|---|---|
| 1. | ஜனனி சுரக்ஷா யோஜனா | 2005 |
| 2. | கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலன் | 2005, ஏப்ரல் 01 |
| 3. | கிம்ஷாரி சக்தி யோஜனா | 2000 |
| 4. | இளம் பருவத்தினருக்கான ஊட்டச்சத்து திட்டம்(NPAG) | 2002-2003 |
| 5. | இந்திரா காந்தி மாட்ரிட்வ சஹ்ராய யோஜனா | 2000 |
| | **பெண்களின் கல்விக்கான திட்டங்கள்** | |
| 1. | சர்வ சிக்ஷ அபியான் (SSA) | 2001 |
| 2. | மகிளா சமக்யா திட்டம் | 1989 |
| 3. | கஸ்தூரிபா காந்தி பலிக்கா வித்யாலயா | 2004 |
| 4. | பலிக்கா சம்ரிதி யோஜனா | 1997 |
| 5. | பேட்டி பச்சோல் - பேட்டி பதோவ் | 2015 |

**தேசிய பெண்கள் அதிகாரமளித்தலுக்கான கொள்கை (National Mission for Empowerment of Women):**

இது மார்ச் 8, 2010 ல் ஏற்படுத்தப்பட்டது.

**நோக்கம்:**

1. சமூக மற்றும் பொருளாதார ரீதியில் பெண்களுக்கு அதிகாரமளித்தல்
2. பெண்கள் உடல், மன, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியில் என அனைத்து வகையிலும் மேம்பாடு அடையச் செய்தல்.

**பெண்களுக்கான மாநில வளமையம் (State Resource Centre for Women):**

**நோக்கம்:** பெண்களுக்கு முழுமையான அதிகாரமளித்தல்

**கொள்கை:** "அனைத்துத் துறைகளினிடையேயும் பங்களிப்பை வலுப்படுத்தல்"

**குறிக்கோள்கள்:** பெண்கள் பங்களிப்பு நடைமுறைப்படுத்துவதற்கான எளிதான வழிகள்.

1. பெண்களுக்கு பொருளாதார அதிகாரமளித்தல்
2. பெண்களுக்கெதிரான வன்முறையை ஒழித்தல்
3. பெண்களுக்கு சமூக அதிகாமளித்தலோடு சுகாதாரக் கல்வியையும் உறுதிப்படுத்துல்
4. முக்கியமான பாலினக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுத்தல்.

**பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் (Ministry of Women & Child Development):**

தற்போதைய தலைவர், கேபினட் அமைச்சராக உள்ள திருமதி. மேனகா காந்தி ஆவார்.

பேண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையானது, தனி அமைச்சகமான ஜனவரி 30, 2006 முதல் நடைமுறைக்கு வந்தது.

- இவ்வமைச்சகம் பெண்களுக்கு மற்றும் குழந்தைகளுக்கு முழுமையான மேம்பாட்டை வலியுறுத்துகிறது.
- இது குறிப்பிட்ட குழுவிற்கு திட்டங்கள், கொள்கைகள், மற்றும் நடைமுறைகளை இயற்றவும், திருத்தம் செய்யவும் அதிகாரம் உடையது.
- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டிற்காகப் பாடுபடும் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுக்கு வழிகாட்டி அவற்றை ஒருங்கிணைக்கிறது.

**இவ்வமைச்சகம் 6 தன்னாட்சி நிறுவனங்களைக் கொண்டுள்ளது.**

1. தேசிய பொது கூட்டுறவு மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு நிறுவனம்
2. தேசிய பெண்கள் ஆணையம்
3. தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்
4. மத்திய  தத்தெடுப்பு வள முகாவாண்மை
5. மத்திய சமூக நலவாரியம்
6. இராஷ்டிரிய மகிளா கோஷ்

**வினாக்கள்**

1. பெண்கள் அதிகாரம் பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரித்து எழுதுக.
2. பெண்களுக்கான சட்டப்பாதுகாப்பு மற்றும் அரசியலமைப்பு கட்டமைப்புகள் பற்றியும் குறிப்பு தருக.
3. பெண்கள் மேம்பாட்டிற்கான ஆணையம் மற்றும் அரசு திட்டங்கள் பற்றி தொகுத்து வரைக.